# III. ஆளணி

1. ஆளுநர், திரு. எச். ஈ. தென்னக்கோன், 1976 மாச்சு 19ஆம் நாள் தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர்களுக்கான 11வது மாநாட்டில் கலந்து கொள்ள இந்தோனேசியா சென்று 1976 ஏப்பிறல் 3ஆம் நாள் திரும்பினர்.

2. ஆளுநர், 1976 மே 13ஆம் நாள் ஆசிய உற்பத்தி அமைப்பு ஆட்சிக் குழுவின் 18வது அமர்வில் கலந்துகொள்ள பிலிப்பைன்சு சென்று 1976 மே 21ஆம் நாள் திரும்பினர்.

3. ஆளுநர், 1976 யூன் 2ஆம் நாள் பொது அமைப்பு நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலண்டனுக்குச் சென்றார் அதனைத் தொடர்ந்து பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கியின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக பாசேலுக்குச் சென்றார், 1976 யூன் 27ஆம் நாள் இலங்கைக்கு வருவதற்கு முன்பு ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் தலைவரான ஆளுநர், செனிவாவில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர்கள் கூட்டத்தில் பங்குபற்றினர்,

4. ஆளுநர், 1976 யூலை 17ஆம் நாள் இந்திய அரசுடன் அலுவல் சார்பான கலந்துரையாடலிற்காக இந்தியா சென்று, 1976 யூலை 21ஆம் நாள் நாடு திரும்பினர்.

5. ஆளுநர், 1976 செத்தெம்பர் 28ஆம் நாள் பொதுநல அமைப்பு நாடுகளின் நிதியமைச்சர்களின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஒங்கொங்கிற்கும், பன்னாட்டு நாணய நிதியத்தினதும் பன்னாட்டு புத்தாக்க அபிவிருத்தி வங்கியினதும் ஆண்டுப்பொதுக்கூட்டத்திலும் கலந்துகொள்ள மணிலாவுக்கும் சென்றார். 1976 ஒற்ரோபர் 15ஆம் நாள் திரும்பினர்.

6. நிதியமைச்சின் பதில் செயலாளர் திரு. சி. சண்முகம், கலாநிதி எல். ஆர். ஜயவர்தன இல்லாத வேளைகளில் நாணயச்சபையினது அலுவல் சார் உறுப்பினராக கடமையாற்றினர்.

7. திட்டமிடல் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் பதில் செயலாளர் கலாநிதி எஸ். ஏ. மீகம, கலாநிதி எச். ஏ. டீ. எஸ். குணசேகரா இல்லாத வேளையில் நாணயச்சபையின் கூட்டங்களில் கலந்துகொண்டார்.

8. துணை ஆளுநரான கலாநிதி காமனி கொரியா, வர்த்தகம், அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் தொடர்ந்து பணிபுரிந்தார்.

9. ஆளுநர் வெளிநாடு சென்றிருந்த வேளைகளில், நாணய விதிச்சட்டத்தின் 24ஆம் பிரிவின்கீழ் துணை ஆளுநரான கலாநிதி டபிள்யூ. இராசபுத்ரம் மூத்த துணை ஆளுநராக அமர்த்தப்பட்டு வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகப் பணிபுரிந்தார். கலாநிதி இராசபுத்ரம் 1976 யூலை 1ஆம் நாள் முதல் பன்னாட்டு நாணய நிதியத்தின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராகப் பதவி ஏற்றார்.

10. பன்னாட்டு நாணய நிதியத்தின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராகப் பணிபுரிந்த துணை ஆளுநர், கலாநிதி டபிள்யூ எம். திலகரத்ன 1976 யூலை 1ஆம் நாள் முதல், வங்கிப்பணிக்கு மீள அழைக்கப்பட்டார்

கலாநிதி திலகரத்ன அவர்கள் ஆளுநர் வெளிநாடு சென்றிருந்த வேளைகளில் நாணய விதிச்சட்டத்தின் 24ஆம் பிரிவின்கீழ் மூத்த துணை ஆளுநராக அமர்த்தப்பட்டு முதன்மை நிறைவேற்று அலுவலராகப் பணிபுரிந்தார்.

11. மதியுரையாளர் திரு. சீ. எச். பர்ஞந்து, 1976 பெப்ருவரி 24ஆம் நாள்முதல் வங்கிப்பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

12. வங்கி மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளர் திரு. டீ. எல். கன்னங்கரா, 1976 சனவரி 1ஆம் நாள்முதல் ஈராண்டு காலத்திற்கு சாம்பிய மத்திய வங்கியில் பணியாற்ற விடுவிக்கப்பட்டார்.

13. ஆசிய பசிபிக்கிற்கான பொருளாதார சமூக ஒத்துழைப்பில் பணி புரிவதற்காக விடுவிக்கப்பட்ட அபிவிருத்தி நிதிப்பணிப்பாளர் திரு. வீ. கே. விக்கிரமசிங்க 1976 சனவரி 19ஆம் நாள்முதல் வங்கிப்பணிக்கு மீள அழைக்கப்பட்டார்.

14. பணியாளரகப் பணிப்பாளர் திரு. ரி. ஜி. புஞ்சி அப்புகாமி, மத்திய வங்கிக் கடமைகளுடன் அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்திற்குத் தொடர்ந்தும் பகுதிநேரக் கடமைக்கு விடுவிக்கப்பட்டார்.

15. வங்கி மேற்பார்வையின் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு. வி. எஸ். சுப்பிரமணியம் 1976 சனவரி 15ஆம் நாள்முதல் பதில்வங்கி மேற்பார்வைப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

16. கலாநிதி பி. ஏ. எஸ். தகநாயக்க 1976 மாச்சு 18ஆம் நாள்முதல் திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டார்.

17. திரு. வீ. எம். பீ. டி. டீ சில்வா, 1976 சனவரி 1ஆம் நாள்முதல் இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்திற்கு விடுவிக்கப்பட்டார்.

18. ஆய்வுக்குரிய இவ்வாண்டுக்காலத்தில் மத்திய வங்கியின் பின்வரும் அலுவலர்கள், அரசிற்கு முழுநேர முறையில் தொடர்ந்தும் விடுவிக்கப்பட்டனர்.

திரு. பி பீ. கரந்தவெல — கப்பல்துறை சுற்றுலா அமைச்சு
திரு. பீ. எம். அசன் — வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சு
கலாநிதி ரீ. டப்ளியூ. வை. றணவீர — திறைசேரி
திரு. எம். பீ. திசநாயக்க – திறைசேரி.

19. திருவாளர்கள் எஸ். இராசலிங்கம், எஸ். ஈஸ்பரதாசன், கலாநிதி எல். ஈ. என். பர்ஞந்து ஆகியோர் திறைசேரிக்கு பகுதிநேர முறையில் தொடர்ந்து விடுவிக்கப்பட்டனர்.